
ST. PATRICK

# புனித பாட்ரிக் (387-493)

இவரது 16ஆம் வயதில் இவர் பிடிபட்டு அயர்லாந்து நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவிசுவாசியான ஒரு மனிதரிடம் ஆடு மாடு மேய்த்தார். பின்னர் தப்பித்து ஐரோப்பா சென்று, அயர்லாந்தின் அப்போஸ்தலராகும்படி தம்மை தயாரித்தார். முதல் செலஸ்தின் என்னும் பாப்பானவர் இவருக்கு ஆயர் பதவி அளித்து அயர்லாந்து நாட்டு மக்களை மனந்திரும்பும்படி இவரை அங்கு அனுப்பினார். அரசன் தன் வீரர்களை அனுப்பி பாட்ரிக்கையும் அவர் தோழர்களையும் பிடித்து வரச் சொன்னான். கர்த்தர் உயிர்த்த விழாவன்று பாட்ரிக், அரசன் முன்னிலையில் நின்றார். இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றி அழகாக அவர்களுக்கு எடுத்துரைத்தார். ஒரே கடவுள் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க அரசனால் முடியவில்லை. அப்பொழுது பாட்ரிக் ஒரு சிறுசெடியைப் பார்த்தார். Shamrock என்பது அதன் பெயர். அதை பிடுங்கி மக்களுக்குக் காண்பித்து "ஒரு தண்டில் மூன்று இலைகள் இருக்கின்றன. மூன்று தேவ ஆட்கள் கடவுளாயிருப்பது அசாத்தியமா?" என்றார். விளக்கத்தைக் கேட்ட மக்களும், அரசனும் மனந்திரும்பினார்கள்.

**சிந்தனை:**

நமது உழைப்பு மிகுதியான பலன் கொடுக்க வேண்டுமானால் செபத்தாலும், தவத்தாலும் கடவுளது உதவியை தேட வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, ஆர்வம் நிறைந்த வேத போதகர்களை திருச்சபைக்கு நிரம்பத் தாரும்.


SAINTS FUN FACTS
by John Sheppard
Dublin
One of the world's most popular saints. Enslaved as a young teen by pagans and Druids, he turned to God while in captivity. Escaping at age 20, he returned to his family and began studying for the priesthood. He preached throughout Ireland converting many for 40 years. He died at Saul, site of the first church he built.
SHEPPARD
(C) 2009 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org

St. Patrick